தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மார்க்சிஸ்ட் கட்சியுடன் பேச்சுவார்த்தை!

2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழக குழுவினர் நேற்று (10.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமையிலான குழுவினருடன் 2 ஆம் கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

வளைகுடா நாடுகளில் போர்ச் சூழல்:

வணிக எரிவாயு தட்டுப்பாடு - மாற்று ஏற்பாடு செய்திடுவீர்!

பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை , மார்ச் 11 –

“வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்” என்று பிரதமர் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்சூழல் காரணமாக தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தலைமைச் செயலகத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

அமெரிக்கா ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று விரிவாக ஆய்வு செய்தேன். தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்திட வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொது மக்களும் வணிக நிறுவனங்களும், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.

சென்னை, குயப்பேட்டை, அறிஞர் அண்ணா மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை,மார்ச்.11-

முதலமைச்சர் ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற உன்னத நோக்கத்துடன் பல்வேறு நலத்திட்ட பணிகளை தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, சென்னை மாவட்டத்தில் நீண்ட காலமாக நத்தம் வகைப்பாடு நிலங்கள் மற்றும் ஆட்சேபனை அற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்கு கணினி பட்டா வழங்குவதில் இருந்த சிக்கல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று கணினி பட்டா வழங்குவதற்கு உண்டான அரசாணைகள் பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நேற்று (10.3.2026) சென்னை மாவட்டம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, எழும்பூர் தாலுகா, புல்லாபுரம் பகுதியைச் சேர்ந்த 204 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே. சேகர்பாபு வழங்கினார்கள்.

இதன்மூலம் பத்திரப்பதிவு செய்வதற்கும், கட்டிடம் கட்டுவதற்கும் இருந்த தடை விலகியுள்ளது.

மேலும், புல்லாபுரம் பகுதி மக்களின் நீண்ட கால பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் ஐந்து ஆண்டுகளில் சுமார் 23 இலட்சம் நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, , சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.கீதா , மாமன்ற உறுப்பினர்கள் திரு.சோ.வேலு, திரு.பரிதி இளம் சுருதி மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
37	CE / IT-RAPDRP	Provision of WhatsApp gateway services for outbound messages conversation from TNPDCL for 1 year

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tnpdcl.org, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in
செ.ம.தொ.இ/1677/ஒப்பந்தப்புள்ளி/2026

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை
ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0559-8/2026

குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஒரு உறை முறையில் கோரும் அறிக்கை

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் 4 & 6ல் உள்ள பல்வேறு தெருக்களில் பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்து புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி/ புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளை மேற்பார்வையிட திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமித்தல்

பணியின் உத்தேச தொகை **ரூ.41.86** வரை முன்வைப்பு தொகை பணியின் உத்தேச தொகையில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **17.03.2026** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **17.03.2026** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 1701 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள நியாயவிலை கடையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால், பொதுக்குழு உறுப்பினர் கணேஷ்பாபு, இளைஞர் துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.சுதாகர் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை

பார்க்கவ குல மக்கள் ஒருங்கிணைப்பு இயக்க நிர்வாகிகள் சந்தித்து தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு முழு ஆதரவு!

சென்னை.மார்ச்.11-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.3.2026) மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பார்க்கவகுல மக்கள் ஒருங்கிணைப்பு இயக்கத்தின் தலைவர் ஆர்.சத்தியநாதன், பொதுச்செயலாளர் எஸ்.எஸ். வெங்கடேசன், பொருளாளர் ஆர். கருணாநிதி மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து ”2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் வளர்ச்சி நாயகனாக திகழும் தங்களது திராவிட மாடல் ஆட்சி மீண்டும் தமிழ் நாட்டிற்கு வரவேண்டும். அதன் மூலம் தமிழர்கள் அனைவரும் மகிழ்வான வாழ்வை வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எங்களது பார்க்கவகுல மக்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் தனது முழு ஆதரவையும் வழங்கிடும்” என்று ஆதரவு அளித்தனர்.

அப்போது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், செய்தித் தொடர்புக் குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி 54ஆ வட்டத்தில் உள்ள பொதுமக்கள் 1000பேருக்கு கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி வளாகத்தில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், இரா.நரேந்திரன், தமிழன் பிரசன்னா, எம்.விஜயகுமார், ஆர்.ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.